(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 75.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2021 மே 18, செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

39/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தாபன விதிக் கோவையின் XXII ஆவது அத்தியாயத்தின் —

(i) உப பிரிவு 18:2:1 இன் படி அரசாங்க சேவையிலுள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒவ்வோர் உயிர் பிறப்புக்குமாக 84 அரசாங்க அலுவலக நாட்களுக்கு முழுச் சம்பளத்துடன் லீவு பெறுவதற்கு உரித்துண்டு என்பதையும்;

(ii) 18:3:1 உப பிரிவின் படி குழந்தையைப் பராமரிப்பதற்காக அரை சம்பளத்துடனான 84 நாள் லீவு உரித்தாக வேண்டும் என்பதையும்;

(iii) 18:4:1 உப பிரிவின் பிரகாரம் அவசியம் ஏற்படின் சம்பளமற்ற 84 நாள் லீவை வழங்க முடியுமென்பதையும்;

(iv) மேற்படி (1) இன் கீழ் லீவைக் கணக்கிடும் போது லீவுக் காலத்திற்குள் வருகின்ற சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை மற்றும் அரசாங்க விடுமுறைகள் உள்ளடக்கலாகாது எனவும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆயினும், அப்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினூடாக செயற்படுத்தப்பட்ட பட்டதாரி பயிலுநர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனங்களின் அடிப்படையில் அவர்களுக்கு பிரசவ விடுமுறை வழங்கப்படுவது 06 வாரங்களுக்கே என்பதனை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) தாபன விதிக் கோவைக்கு அமைவாக அவர்களுக்கு உரித்தாக வேண்டிய பிரசவ விடுமுறையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

141/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஊவா மாகாண சபை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கணக்காய்வு வினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதி முறைகேடுகள் மற்றும் தவறான நிதி பயன்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கணக்காய்வு விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) நிதி முறைகேடுகள் மற்றும் தவறான நிதிக் கையாளல் தொடர்பாக அரசியல் அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

236/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தேங்காய் எண்ணெய் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

265/2020

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புகையிரதத் திணைக்களத்திற்குரிய இரத்மலானையில் அமைந்துள்ள பிரதான பராமரிப்பு வேலைத் தலத்தின் இயலளவானது போதுமானதாக இல்லையென்பதையும்;

(ii) அது புகையிரதச் சேவையை வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்குத் தடையாக அமைந்துள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இரத்மலானை பிரதான பராமரிப்பு வேலைத் தலத்தின் இயலளவினை அதிகரிப்பதற்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் இயந்திர சாதனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிட எதிர்பார்க்கும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு செலவிட எதிர்பார்க்கும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

560/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தினால் இன்றளவில் பேணி வரப்படுகின்ற நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) தனியாரினால் பேணி வரப்படுகின்ற நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்தகைய நெல் களஞ்சியசாலைகள் ஒவ்வொன்றிலும் இன்றளவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லின் அளவு தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி களஞ்சியசாலைகளுக்கு மேலதிகமாக புதிய களஞ்சியசாலை நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) விவசாயிகளுக்கு இன்றளவில் இலவசமாக உரம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒரு விவசாயிக்கு எவ்வளவு உரம் வழங்கப்படுகிறது என்பதையும்;

(iii) அவ்வாறு இலவசமாக வழங்கப்படுகின்ற உர வகைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் அதற்காக எவ்வளவு தொகையினைச் செலவிடுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

600/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் பிரதான போக்குவரத்து மார்க்கமான மாவிலித்துறையிலிருந்து சாராப்பிட்டி ஊடாக கோட்டைக்காடு வரையுள்ள 08 கிலோ மீற்றர்கள் நீளமான நெடுந்தீவு பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்ற இந்த பிரதான வீதியை மாணவர்கள், அலுவலர்கள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்படுத்துவதுடன் நோயாளர் காவு வண்டிகளும் இந்த வீதியில் பயணிக்கின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்தப் பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) இந்த வீதி முழுமையாக எக்காலப்பகுதியில் புனரமைக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

610/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின், மருத்துவ பீடத்தின் பிணியாய்வு பயிற்சிகளுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இது தொடர்பான விடயங்களை ஆய்வு செய்வதற்காக மூன்றுபேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலை தொடர்பில் பேராசிரியர் அலகு அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அலகினை குளியாப்பிட்டி வைத்தியசாலையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

633/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள திக்கோடை வைத்தியசாலையானது மக்களது தேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி வைத்தியசாலையில் சேவைகளைப் பெறுவதற்காக வருகைதரும் நோயாளர்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் நாளாந்தம் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

642/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கீழ் மல்வத்துஓயா நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக முன்னாள் பிரதமரினால் அடிக்கல் நடப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) நீர்ப்பாசன திணைக்களம், சீன நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இரண்டில் இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iv) சீன நிறுவனத்தினால் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுமாயின், அதற்கான மதிப்பீட்டுச் செலவினம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

734/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தபால் அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி தபால் அலுவலகங்களில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் இயங்கும் தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தபால் அலுவலகங்களுக்கு நிரந்தர கட்டிடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைதொடர்பு இயக்குனர் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆம் திகதிய 2208/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகன சொகுசு வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 05 ஆம் திகதிய 2209/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 6(2) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 09 ஆம் திகதிய 2214/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் கீழ் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 05 ஆம் திகதிய 2209/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 நவம்பர் 17 ஆந் திகதிய 2202/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 நவம்பர் 21 ஆந் திகதிய 2202/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 திசெம்பர் 14 ஆம் திகதிய 2206/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 திசெம்பர் 16 ஆம் திகதிய 2206/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 சனவரி 13 ஆம் திகதிய 2210/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 சனவரி 18 ஆம் திகதிய 2211/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 பெப்ரவரி 11 ஆம் திகதிய 2214/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 மார்ச் 03 ஆம் திகதிய 2217/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் சிலோன் டயர் மெனுபக்ஷரிங் கம்பெனி (பிறைவேட் லிமிட்டெட்) தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மார்ச் 05 ஆம் திகதிய 2217/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் கொழும்பு சர்வதேச நிதிசார் நிலைய (CIFC) கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மார்ச் 23 ஆம் திகதிய 2220/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்பிறல் 07 ஆம் திகதிய 2222/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 23 ஆம் திகதிய 2207/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

*நீதி அமைச்சர்,— காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை திருத்தம் செய்தல்,—* 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(1) பிரிவின் மூலம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக மேற்படி ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன். மேற்படி சட்டத்தின் 4(1) மற்றும் 6 ஆம் பிரிவினால் உறுப்பினர்கள் 07 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன், அதன் உறுப்பினர் ஒருவர் அவ் அலுவலகத்தின் தவிசாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளதனாலும்;

மேற்படி அலுவலர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற சம்பளத்தை செலுத்துவதற்கு மற்றும் அதனை திரட்டிய நிதியத்திற்கு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதனாலும்;

18/0689/705/001 ஆம் இலக்க மற்றும் 2018.06.05 ஆம் திகதிய திருத்திய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் 2018.09.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கு ரூபா 100,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவும், மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவாக ரூபா 10,000/- உம் மற்றும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக லீற்றர் 225 இற்கும், மேற்படி அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கு 75,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவும், மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவாக ரூபா 8,000/- உம் மற்றும் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு உள்ள தூரத்தின் அடிப்படையில் 350 கி.மீ. வரை ரூ. 25,000/- அல்லது கி.மி. 350 அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திற்கு ரூபா 50,000/- ஆன மாதாந்தப் போக்குவரத்துக் கொடுப்பனவிற்கும் உரித்துப் பெறுவதனாலும்;

நீதி அமைச்சின் கீழுள்ள இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கு சம்பளத்தை தீர்மானிப்பது பாராளுமன்றமாகும் என்பதுடன், 2019.09.20 ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைய மேற்படி அலுவலர்களின் சம்பளம் திருத்தம் செய்யப்பட்டு அதிகரிக்கப்பட்டுள்ளதனாலும்;

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய 2020.11.30 ஆம் திகதி முதல் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பின்வருமாறு செலுத்தத் தீர்மானிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைப/21/0362/330/022 மற்றும் 2021.03.08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதனாலும்:—

(அ) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கு மாதாந்தக் கொடுப்பனவாக தற்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் தொலைபேசி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 100,000/- இலிருந்து ரூபா 135,000/- ஆக அதிகரித்துச் செலுத்துவதற்கும்;

(ஆ) தவிசாளரின் உபயோகத்திற்கு உத்தியோகபூர்வ வாகனமொன்று பெற்றுக் கொடுக்கப்படாத சந்தர்ப்பங்களில் PED 1/2015(i) ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவிசாளரின் சொந்த வாகனத்தை கடமைகளுக்குப் பயன்படுத்துவதற்காக ரூபா 50,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை தற்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் தொலைபேசி கொடுப்பனவுக்கு மேலதிகமாக ரூபா 75,000/- முதல் ரூபா 90,000/- ஆக அதிகரித்துச் செலுத்துதல்.

இதற்கமைய, 2016 இன் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு அரசாங்க திரட்டிய நிதியத்திற்கு பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* 19.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

* 20.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.